**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**ஆறாம் தவணைப் பரீட்சை - 2021**
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **இந்துசமயம் I**<br>**Hinduism I** | **Two Hours**<br>**Gr -13 (2021)** | **42** | **T** | **I** |

(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)

### பகுதி I

- ***1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று எதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததைத் தெரிவு செய்க.***

*01)* 1. இந்திரன் 2. பிரஜாபதி 3. நாரதர்
3. நசிகேசன் 5. உத்தலாகர்

*02)* 1. நம்மாழ்வர் 2. ஆண்டாள் 3. பூதத்தாழ்வர்
4. பெரியாழ்வர் 5. சேரமான் பெருமாள்

*03)* 1. கமண்டலம் 2. காவடி 3. கும்பம்
4. செம்பாட்டம் 5. பூங்குடம்

*04)* 1. இறுவெட்டு 2. ஒளிநாடா 3. இணையம்
4. பத்திரிகை 5. ஒலிநாடா

*05)* 1. சாந்தோக்கிய 2. பிருகதாரணியம் 3. ஆயுஸ்ஸாணி
4. முண்டகோ 5. பிரச்சன

- ***06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடி சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடிச்சொல்லைத் தெரிவு செய்க.***

*06)* 1. சுந்தரர் - திருத்தொண்டர் தொகை
2. நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி
3. நம்மாழ்வார் - திருவிருத்தம்
4. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு
5. ஆண்டாள் - திருவாய்மொழி

*07)* 1. சிவானந்தலகரி - சங்கரர்
2. மாண்டுக்கிய காரிகை - கௌடபாதர்
3. வக்கிரமேர்வலி - மகேந்திரவர்மன்
4. ஷஷ்ணுதத்துவ நிர்ணயம் - ஆண்டாள்
5. குமாரசம்பவம் - காளிதாசர்

*08)* 1. நியாயம் - கௌதமர்
2. வைசேடிகம் - பாதாயனர்
3. சாங்கியம் - கபிலர்
4. மீமாமசை - ஜைமினி
5. யோகம் - பதஞ்சலி

09) 1. 2ஆம் தந்திரம் - காமிகாகமத்தின் சாரம்
2. 4ஆம் தந்திரம் - கிந்தியாகமத்தின் சாரம்
3. 5ஆம் தந்திரம் - சாரணாகமத்தின் சாரம்
4. 9ஆம் தந்திரம் - மகுடாகமத்தின் சாரம்
5. 8ஆம் தந்திரம் - சுப்பிராகமத்தின் சாரம்

10) 1. புவனேகபாகு - நகுலேஸ்வரம்
2. துட்டகைமுனு - கதிர்காமம்
3. குளக்கோட்டன் - திருக்கோணேஸ்வரம்
4. இராஜேந்திரசோழன் - வானவன் மாதேவீஸ்வரம்
5. தாழிக்குமான் - திருக்கேதீஸ்வரம்

- ***11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ' 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.***

**11)**

| அ | ஆ |
|---|---|
| 1. இயமம் | A மூச்சைப் பயிற்றுவிக்கும் பயிற்சி |
| 2. நியமம் | B புலடைக்கம் |
| 3. ஆசனம் | C ஊடலை தியானத்திற்கான வழியில் |
| 4. பிரணாயாமம் | D தீய செயல்களை தவிர்த்தல் வைத்திருத்தல் |
| 5. பிரததியாகாரம் | E ஒழுக்க விதிகளை கடைப்பிடித்தல் |

1. ADCEB 2. EBACD 3. EDABC 4. EDCAB 5. DECAB

**12)**

| அ | ஆ |
|---|---|
| 1. குரு | A நமசிவாய |
| 2. இலிங்கம் | B குறி |
| 3. சங்கமம் | C சிவனடியார் கூட்டம் |
| 4. தீட்சை | D குற்றம் நீக்குபவர் |
| 5. பஞ்சாட்சரமந்திரம் | E பாசத்தை கெடுதது ஞானத்தை அளிப்பவர் |

1. ACBDE 2. DBCAE 3. CAEBD 4. DBCEA 5. BCDEA

**13)**

| அ | ஆ |
|---|---|
| 1. நல்வழி | A 38 அதிகாரங்கள் |
| 2. ஆத்திசூடி | B 108 கூற்றுக்கள் |
| 3. அறத்துப்பால் | C 40 வெண்பாக்கள் |
| 4. கொன்றைவேந்தன் | D 70 அதிகாரங்கள் |
| 5. பொருட்பால் | E 91 கூற்றுக்கள் |

1. EBACD 2. DABCE 3. CBAED 4. EDACB 5. CDAEB

**14)**

| அ | ஆ |
|---|---|
| 1. சிவராத்திரி விரதம் | A முருகன் |
| 2. ஏகாதசி விரதம் | B சக்தி |
| 3. கந்தசஷ்டி விரதம் | C சிவன் |
| 4. நவராத்திரி விரதம் | D வைரவர் |
| 5. சித்திரைப் பரணி | E விஷ்ணு |

1. CEABD 2. EACBD 3. CEDBA 4. ABEC 5. ECDAB

15) அ ஆ

| அ | ஆ |
|---|---|
| 1. படைத்தல் | A மோதகம் இருக்கும் கரம் |
| 2. காத்தல் | B அமுத கலசம் |
| 3. அழித்தல் | C பாசம் இருக்கும் கை |
| 4. அருளல் | D எழுத்தாணி பிடிக்கும் கை |
| 5. மறைத்தல் | E அங்குசம் ஏந்திய கரம் |

1. ADECB 2. DAEBC 3. CEDAB 4. DBACE 5. DEABC

- **16 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) இலங்கையில் 20ஆம் நூற்றாண்டில் தோன்றி இந்துசமய பத்திரிகைகளின் தொகுதி.
1. சைவக்காவலன், மெய்கண்டார்நெறி, இந்து சாதனம்
2. சைவசித்தாந்த பானு, விவேகானந்தன், சிவதொண்டன்
3. சிவதொண்டன், இலங்கைதேசன், சைவக்காவலன்
4. சைவசித்தாந்த பானு, சைவக்காவலன்
5. சிவதொண்டன், சைவசித்தாந்தபானு, இந்து சாதனம்

17) அப்பர் சுவாமிகளின் அற்புதங்கள் மூன்று அடங்கும் தொகுதி
1. திருத்தாளம்பெற்றமை, படிக்காசு பெறல், எலும்பை பெண்ணுருவாக்கல்
2. பாம்பு தீண்டிய பிள்ளையை எழுப்புதல், சூலைநோய் நீக்கப்பெறல், முத்துக்குடைபெறல்
3. பாம்பு தீண்டிய பிள்ளையை எழுப்புதல், கதவு திறக்க பாடியமை, படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை
4. செங்கற்களை பொன்கட்டிகளாக்கியமை, பொன்னை ஆற்றிலிட்டு குளத்தில் எடுத்தமை, சூலைநோய் நீங்கப் பெற்றமை.

18) உயிரினங்கள் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு குறிப்பாக வீட்டில் உள்ள உயிரினங்களின் பொருட்ச் செய்யப்படுவது.
1. பூதயக்ஞம் 2. பிரமயக்ஞம் 3. தேசயக்ஞம்
4. பிதிர்யக்ஞம் 5. மானிடயக்ஞம்

19) ஆரியா சதகம் என்ற நூலை எழுதியவர்
1. கோவிந்தர் 2. சௌடபாதர் 3. சங்கரர் 4. இராமானுஜர் 5. மத்துவர்

20) "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்" என்ற பாடலடி இடம்பெறும் நூல்.
1. சிவஞானபோதம் 2. அபிராமிஅந்ததாதி 3. திருப்புகழ்
4. அற்புதத்திருவந்தாதி 5. பராபரக்கண்ணி

21) திருமுறைகளில் தமக்குள்ள ஈடுபாட்டினால் "தேவார அருள் முறைத் திரட்டு" என்ற நூலை வெளியிட்டவர்.
1. மெய்கண்டதேவர் 2. மறைஞான சம்பந்தர் 3. அருணகிரிநாதர்
4. உமாபதி சிவாச்சாரியார் 5. நம்பியாண்டார் நம்பி

22) ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி கூறும் ஆகமம்.
1. காரண ஆகமம் 2. காமிக ஆகமம் 3. வாதுள ஆகமம்
4. கிரண ஆகமம் 5. ரௌரவ ஆகமம்

23) "அஷ்டோத்திர நீதிநூல்" எனப்படுவது.
1. ஆத்திசூடி 2. நல்வழி 3. கொன்றைவேந்தன் 4. திருக்குறள் 5. மூதுரை

24) விநாயகனின் திருவுருவில் எழுத்தாணி பிடித்தகரம் உணர்த்தும் தத்துவம்.
1. படைத்தல் 2. காத்தல் 3. அழித்தல் 4. மறைத்தல் 5. அருளல்

25) உயர பிரம்மம் ஒன்றே அதற்கப்பால் ஒன்றுமில்லை எனக்கூறும் உபநிடதம்.
1. தைத்தீரிய உபநிடதம் 2. மாண்டுக்கிய உபநிடதம் 3. கடோ உபநிடதம்
4. முண்டக உபநிடதம் 5. பிரச்சினை உபநிடதம்

26) இந்து மருத்துவ துறையுடன் தொடர்பற்ற அறிஞரின் பெயர்களில் ஒன்று.
1. சுஸ்ருதர் 2. சரகர் 3. ஆரியப்பட்டர் 4. அத்திரேயர் 5. தனவந்திரி

27) இராசி மண்டலம் எத்தனையாக வகுக்கப்பட்டுள்ளது.
1. 15 2. 36 3. 27 4. 12 5. 25

28) புவனேகபாகு மன்னன் நல்லூர் கந்தசாமி ஆலயம் அமைத்தமை பற்றிக் குறிப்பிடுவது.
1. கைலாயமாலை 2. யாழ்ப்பாண வைபவமாலை 3. திருக்கரசைப் புராணம்
4. தட்சிணகைலாய புராணம் 5. கோணேசர் கல்வெட்டு

29) இந்து அறநூல்களில் தமிழ் நூல் அல்லாதது
1. சிலப்பதிகாரம் 2. ஆத்திசூடி 3. கொன்றைவேந்தன் 4. தர்மசாஸ்திரம் 5. திருக்குறள்

30) கல்வியில் கரையில்லாமாநகரம் என அப்பர் தேவாரத்தில் போற்றப்பட்ட தேசம்
1. மதுரை 2. சுவந்தி 3. கன்னோசி 4. காசி 5. காஞ்சி

❖ **31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.**

31) **இராமானுஜர்**
1. தத்துவத்திரயக் கொள்கையை முன்வைத்தமை
2. போதாயனவிருத்தி நூல் பகவான் அனுக்கிரகத்தால் பெற்றமை.
3. வேதாந்தசாரம வேதாந்த சங்கிரகம் போன்ற நூல்களை எழுதியமை.
4. அத்வைத மதத்தை நிறுவியமை
5. ஆனமாவாகி வைகுண்டத்தை அடைதல் வீடுபேறு என்றமை.

32) சித்தர்கள்
1) சித்தத்தை இறை ஞானத்தில் வைத்து வழிபடுபவர்களாவர்
2) பதினெண் சித்தர்களுள் நவநாதசித்தரும் ஒருவராவர்
3) அட்டமா சித்திகள் கைவரப்பெற்றவர்கள்
4) சமுதாயத்துடன் தாமரை இலையில் நீர் போல் வாழ்பவர்கள்
5) அறக்கோட்பாடு ஞானம் என்பவற்றை வளர்த்தவர்கள்

33) ஆணவம்

1) இருளிலும் கொடியது
2) ஆன்மாவின் குணங்களில் ஒன்று
3) அகந்தைக்கு காரணமாகும்
4) ஆன்மாவை சிற்றறிவு உடையதாகும்
5) யோகம், கற்பம் முதலிய குணங்களை உடையது.

34) பிரம்மசூத்திரம்

1) 645 சூத்திரங்களைக் கொண்டது.
2) இந்து தத்துவத்தின் திறவு கோலாகும்.
3) சாரீரக சூத்திரம், உத்தரமீமாம்சை என்ற மறு பெயர்களைக் கொண்டது.
4) பாதராயணாரால் இயற்றப்பட்டது.
5) நான்கு அத்தியாயங்களைக் கொண்டது.

35) பஞ்சாசேர மந்திரம்

1) நமசிவாய என்பது தூல பஞ்சாட்சரமாகும்.
2) உபாயமார்க்கத்தினரால் உச்சாடனம் செய்யப்படும்.
3) சிவாயநம என்பது சூலசூக்கு பஞ்சாட்சரம் எனப்படும்.
4) முத்திக்குரிய சாதனங்களில் ஒன்று
5) மெய்ப்பொருளின் சாரத்தை உணர்த்தும் சிறப்புக்குரியது.

- **மேல்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| A<br>மங்கல வாசகம் | B<br>மானசாரம் | C<br>பதிகங்கள் | D<br>ஓம்படைக் கிழவி | E<br>பிரம்மசூத்திரம் |
|---|---|---|---|---|
| F<br>உபநிடதம் | G<br>தாண்டகம் | H<br>அத்வைதம் | I<br>கலாசலம் | J<br>தாடலை |

36) விக்கிரக்கணயுடன் தொடர்புடையவை.

1) AB 2) IA 3) BG 4) AI 5) BI

37) இந்து சமய தொல்பொருள் சின்னங்களுடன் தொடர்புடையவை.

1) AC 2) DI 3) AJ 4) AD 5) CI

38) இறைவனின் இருப்புப் பற்றிய வாதத்தை முன்வைத்து நிறுவிய பெருமைக்குரிய நூல்கள்.

1) EF 2) AF 3) GH 4) FI 5) EJ

39) பல்லவர் கால பக்தி இயக்கத்தின் வெற்றிக்கு அடிப்படையாய் அமைந்த முக்கிய இலக்கிய வடிவங்கள்.

1) HA 2) DC 3) JF 4) AC 5) CB

40) வேதாந்தமும் சைவசித்தாந்தமும் ஆன்மாவின் முத்தி நிலையை குறிக்க கையாண்ட சொற்கள்.

1) HA 2) BJ 3) HJ 4) EA 5) FI

- **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப்பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

41) ஆகமமும் அதன் தாற்பரியமும்

1) ஆகமங்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவை.
2) ஆகமங்கள் கிரியைகள் கலைகள் பற்றிக் கூறுகின்றது.
3) ஆலயஙகள் அமைக்கப்பட வேண்டிய முறைகள் பற்றி கூறுகின்றது.
4) ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முக்கிய விடயங்களை எடுத்துக் கூறுகின்றது.
5) தொன்றுதொட்டு வரும் அறிவு என பொருள்படும்.

42) நடராஜ முர்த்தம்.

1) சிற்ப சாத்திரங்கள் கூறும் அளவுப் பிரமாணங்களின்படி அமைக்கப்படுவது.
2) சிவமூர்த்தங்களில் ஒன்றாகும்.
3) பஞ்சாட்சர மந்திரத்துடன் தொடர்புடையது.
4) "குனித்த புருவுமும்" என்ற திருமுறைப்பாலுடன் தொடர்பு
5) சமய, கலா தத்துவ, தத்துவ சிறப்புடையது.

43) சிந்துவெளிச் சமயம்

1) 5000 ஆண்டுகளுக்கு முன் பழமை வாய்ந்தது.
2) சிந்துவெளிக் காலச் சமயநிலையில் சிவ, சக்தி, சூரிய விஷ்ணு வழிபாடுகள் காணப்பட்டது.
3) சிந்துவெளி கால நகரங்களாக மொகஞ்சதாரோ, ஹரப்பா என்பன கண்டுபிடிக்கப்பட்டன.
4) தற்கால சக்தி வழிபாட்டுடன் இணையான சக்தி வழிபாடு காணப்பட்டது.
5) சேர். ஜோன். மார்சல் தலைமையில் ஆய்வு இடம்பெற்றது.

44) சிவராத்திரி.

1) சிவவிரதங்களில் ஒன்று.
2) சிவனுக்குரிய இராத்திரி என பொருள்படும்.
3) அகவிருள் நீங்கி சிவஞான ஒளி கிடைக்கவும்.
4) ஐந்து வகைகள் காணப்படுகின்றது.
5) மாசி மாத கிருஷ்ணபட்ச சதுர்த்ததியில் அனுட்டிக்கப்படுகிறது.

45) திருநாவுக்கரசு நாயனார்.

1) தாசமார்க்கத்தில் வாழ்ந்தவர்.
2) பாடலிப்புர சமணப் பள்ளியில் தலைவராக இருந்தவர்.
3) சமணரகளின் கொடுமைகளுக்கு உள்ளானவர்.
4) பக்தி பூர்வமாக இறைவனை வழிபடவேண்டும் என தாசமார்க்கத்தில் வாழ்ந்து காட்டியவர்.
5) சூல இடப இலட்சினை தோளில் பொறிக்கப்பெற்றவர்.

46) இந்து மருத்துவம்

1) மேல்நாட்டு மருத்துவ முறைக்கு சுருதி போல் ஆதாரமானதாகும்.
2) பிதாமஹ கோட்பாட்டுடன் தொடர்புடையது.
3) கணியன் என்பவர் மருத்துவ துறையில் வல்லவர்.
4) ஆலய வழிபாட்டுடன் தொடர்புடையது.
5) சமயச் சின்னங்கள் மருத்துவ குணமுடையவையாகும்.

47) மாமல்லபுரச் சிற்பங்கள்

1) நாகர திராவிட கலைப்பாணியைச் சேர்ந்தது.
2) தருமராஜ ரதம் "சிற்பக் கலைக் களஞ்சியம்" என சிறப்பிக்கப்படுகின்றது.
3) பஞ்சபாண்டவர் ரதம அமையப்பெற்றமை சிறப்பாகும்.
4) பல்லவர் காலத்திற்குரிய சிற்பங்களாக விளங்குகின்றன.
5) ஜலசயனம் பெரிய கற்றளி என்பன மிகச்சிறப்பு வாய்ந்தவையாகும்.

48) ஆறுமுகநாவலரின் சிறப்பு

1) சமயம் வளர்த்த பெரியார்களில் ஒருவராவர்
2) பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் ஆகும்.
3) ஆலயங்களை புனருத்தாரணங்கள் செய்தவராவார்.
4) சைவத்தின் விடிவெள்ளி, ஐந்தாம் குரவர் என சிறப்பிக்கப்பட்டவர்.
5) சைவப் பாடசாலைகளை ஆரம்பித்து வைத்தவர் ஆவார்.

49) காணபத்தியம்

1) கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டது.
2) கணபதியின் உடலில் விஷ்ணு, சிவ, சக்தி தெய்வங்கள் குடிகொணடுள்ளன.
3) ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துகின்றது.
4) எக்காரியத்தையும் தொடங்கும்போது இலகுவான வழிபடப்படும் தெய்வம் கணபதி ஆகும்.
5) சண்மத வழிபாட்டு நெறிகளில் ஒன்றாகும்.

50) புராணங்கள்

1) பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
2) குப்தர் காலத்தில் எழுச்சி பெற்றது.
3) வடமொழிப் புராணங்கள் 18 ஆகும்.
4) பஞ்ச லட்சணங்களைக் கொண்டது.
5) சமயக் கருத்துக்களை இலகுவாக எளிமையாக கூறும் பாங்குடையது.

(50 x 2 = 100 புள்ளிகள்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இந்துசமயம் II | | Three Hours | 42 | T | II |
| Hinduism II | | Gr -13 (2021) | | | |

*மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்*

### பகுதி I

**பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) சிந்துவெளி நாகரிக காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை விளக்குக.

i) வரலாற்று மூலங்கள் ii) ஆண் தெய்வ வழிபாடு

iii) நுண்கலைகள் iv) வாழ்க்கை முறை (5x4= 20 புள்ளிகள்)

02) புராணங்கள் பிரதிபலிக்கும் பண்பாட்டு அம்சங்களை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.

i) சமயநெறிகள் ii) பொருள் மரபு

iii) தத்துவ சிந்தனைகள் iv) அரச வம்சங்களின் வரலாறு (5x4= 20 புள்ளிகள்)

03) அறுவகைச் சமயங்களில் ஒன்றான காணபத்திய வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) வழிபாட்டு முறைகள் ii) சைவசமயத் தொடர்பு

iii) தோற்றமும் வளர்ச்சியும் iv) திருவுருவத் தத்துவ விளக்கம். (5x4= 20 புள்ளிகள்)

### பகுதி II

04) இந்துதத்துவ மரபில் இராமானுஜரது விசிட்டாத்துவைதம் பெறும் சிறப்பினை மேல்வரும் அம்சங்களில் ஆராய்க.

i) "விசிட்டாத்துவைதம்" என்பதன் பொருள் தருக.

ii) இராமானுஜர் பயன்படுத்திய பிரமாணங்கள்.

iii) சமயச் சீர்திருத்தங்கள்

iv) பரம்பொருட் கொள்கை (5x4= 20 புள்ளிகள்)

05) பல்லவர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடைதருக.

i) அரசியல் சமூக சூழ்நிலை

ii) திருக்கோயில்களின் வளர்ச்சி

iii) கட்டிடங்களை அலங்கரிக்கும் சிற்பங்கள்

iv) மகேந்திரவர்மனின் கட்டிடப் பாணி. (5x4= 20 புள்ளிகள்

06) சைவசித்தாந்தம் கூறும் ஆன்மக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

i) ஆன்மாவின் இயல்புகள்

ii) ஆனமாவும் மும்மலமும்

iii) ஆன்மா இறையருள் பெறும் வழிகள்

iv) முக்திப்பேறு (5x4= 20 புள்ளிகள்)

07) மனித மேம்பாட்டுக்கு விரதங்கள உதவுமாற்றை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i) விரதங்கள் அனுட்டிப்பதன் மூலம் வளர்க்கப்படும் நற்பண்புகள் 5 தருக?

ii) விரதம் அனுட்டிப்போர் கடைப்பிடிக்க வேண்டிய பொது நியதிகள் 5 தருக?

iii) நீர் அறிந்த முருக விரதங்களை குறிப்பிடுக.

iv) கந்தசஷ்டி விரத நியதிகளைக் குறிப்பிடுக. (5x4= 20 புள்ளிகள்)

08) இந்து அறிவியல் வளர்ச்சியில் மருத்துவத்தின் சிறப்பியல்புகளை மேல் வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.

i) இந்து மருத்துவத்தின் முக்கியத்துவம்

ii) இந்து வழிபாட்டில் மருத்துவ சிந்தனைகள்

iii) இந்து மருத்துவம் என்பதன் வரைவிலக்கணம்

iv) இநது மருத்துவம் இதிகாசத்தில்பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக. (5x4= 20 புள்ளிகள்)